**வன பரிபாலனத் திணைக்கள நிதியம் - 2014**

வன பரிபாலனத் திணைக்கள நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு வன பரிபாலன கட்டளைச் சட்டத்தின் (451 ஆம் அதிகாரம்) 64 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் 10- ஊ ஆம் இலக்க கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வன பரிபாலனத் திணைக்கள நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வனக் குற்ற வழக்குகள் முடிவடைந்து உரிய தண்டப் பணம் நீதிமன்றங்களின் மூலம் நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியின் போது உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தவேண்டியிருந்த வெகுமதிப் பணம் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்திலும் ஆண்டின் இறுதியிலும் கிடைக்கவேண்டிய தண்டப்பணம் சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாமையாலும் பிழையாகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாகவும் ஆண்டின் தண்டப் பண வருமானம் ரூபா 667,484 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காகக் கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,704,102 தொகை மதிப்பிடப்பட்டு கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் முதல் 02 மாதத்தின் போது மாத்திரம் மீளாய்வாண்டிற்காக நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 2,027,093 தொகை நிதியத்திற்குக் கிடைத்திருந்தது. அதன் படி கிடைக்கவேண்டிய பண மதிப்பீடு சரியான அடிப்படையொன்றில் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) வன பரிபாலனத் திணைக்களத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 178,500 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் நீதிமன்றத்திற்கு மீளச் செலுத்தவேண்டிய ரூபா 37,500 தொகையான தண்டப்பணம் வருமானமாக இனங்காணப்பட்டமையால் நீதிமன்றத் தண்டப்பண பெறுவனவு ரூபா 216,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்தப் பணம் உரிய தரப்பினருக்குச் செலுத்தும் போது வெகுமதி வழங்கல் கணக்கு வரவு வைக்கப்பட்டமையால் ஆண்டின் வெகுமதி வழங்கல் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,286,799 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 10,282,541 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,004,258 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. நீதிமன்றத் தண்டப் பண பெறுவனவை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டில் ரூபா 7,845,796 இனால் அதிகரித்தமையால் ஒட்டுமொத்த பெறுவனவுகள் 28 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் வெகுமதி வழங்கல் மீளாய்வாண்டின் போது ரூபா 1,292,784 இனால் குறைவடைந்தமையாலும் பயிற்சி செலவினம் ரூபா 565,092 இனால் குறைவடைந்தமையாலும் ஒட்டுமொத்த கொடுப்பனவுகள் 15 சதவீதத்தால் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) நீதிமன்றத்தால் அறவிடப்பட்ட தண்டப்பணம் வன நிதியத்தில் செலவு வைக்கப்படுவதில் தாமதம் நிலவியதுடன் ஆண்டின் ஒவ்வொரு மாதத்திற்காகவும் பெறப்படவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் சரியாக கணிப்பிடுவதற்கோ அல்லது அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் முறையொன்றோ கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வனக் குற்ற வழக்குகள் முடிவடைந்தபோதும் அவ்வாறான வனக் குற்றங்களைத் தவிர்ப்பதற்கு பங்களிப்புச் செய்த உத்தியோகத்தர்கள் வெகுமதியைக் கோருவதும் கோரப்பட்ட வெகுமதி வழங்கப்படுவதில் தாமதத்தைத் தவிர்த்துக் கொள்வதற்குமான ஒழுங்கான முறையொன்று கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

2014 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

சட்டத்தை அமுலாக்குகையில் பணியாற்றும் உத்தியோகத்தர்களது பணியை மதிப்பீடு செய்து நலன்களை வழங்கும் பிரதான நோக்கத்தில் நிறுவப்பட்ட வன பரிபாலனத் திணைக்கள நிதியத்திலிருந்து வழங்கப்படும் வெகுமதித்தொகை செலவினக் கட்டுப்பாட்டின் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய செலவினமல்லாத போதிலும், மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டுகளினதும் புள்ளிவிபரங்களின் பிரகாரம் ஒவ்வொரு வருடத்திலும் மதிப்பீட்டுச் செலவினத்தில் 25 – 30 சதவீதத்திற்கிடையில் சேமிப்பு காணப்பட்டது. ஒழுங்குமுறையான செலவின நிருவாகம் இச் சேமிப்புக்களுக்கான காரணம் என முகாமைத்துவம் தெரிவித்திருந்த போதிலும் தொடர்ச்சியாக கவனத்தில் கொள்ளக்கூடிய சேமிப்பு காணப்பட்டமையால் பாதீட்டு மதிப்பீடு சரியான அடிப்படையில் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது வனபரிபாலன நாயகத்திற்குத் தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) வருமானச் சேகரிப்பும் வங்கியிலிடலும்
(இ) கணக்கு வைத்தல்